செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

நடத்தும்

# இந்தியக் கலை மரபுகள்

# (Art Traditions of India)

பயிலரங்கம் - 10

(24.09.2024 – 30.09.2024)

## அறிவிப்பும் அழைப்பும்

உலக நாடுகளுள் கலைகளுக்கும் கலாச்சாரத்திற்கும் புகழ்பெற்று விளங்கும் நாடாகத் திகழ்வது இந்தியவாகும். இந்தியக் கலைகள், பிற தேசங்களின் கலைகளிலிருந்து சிலவற்றை உள்வாங்கிக்கொண்டாலும், இந்தியாவின் பன்மைத்துவ மதம், மொழி, இனங்களின் பண்பாடுகளைப் பிரதிபலிப்பனவாகத் தனித்துவம் பெற்று விளங்குகின்றன. இந்தியாவைக் குறித்த நம் பெருமிதத்துக்கும் அதுவே மூலமாகவும் அமைகின்றது.

இந்தியக் கலைமரபு பன்னெடுங்காலமாக ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்கு வழிவழியாகக் கையளிக்கப்பட்டு வருவதால் பல தனித்துவத் தன்மைகளுடன் சிறப்புற்று விளங்குகின்றன. இந்தியாவில் உள்ள ஒவ்வொருகாலத் தலைமுறையும் குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட பொருட்கள், தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திச் சிறந்த கலைப் படைப்புகளை உருவாக்கியது. இந்தக் கலை வடிவங்கள் பயன்பாட்டுக் கலை, நாட்டுப்புறக் கலை, பழங்குடி கலை, கைவினைப்பொருட்கள், சடங்குக் கலை எனப் பன்முகத் தன்மையில் வளம்பெற்று விளங்குகின்றன.

உலகக் கலை மரபுகளுள் இந்தியக் கலை மரபானது தனித்துவம் மிக்கதாகவும் பொதுமையான இயல்புகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குவதாகவும் காணப்படுகின்றது. மக்கள் வாழ்வினையும், சமயச் சார்பான முறைகளையும் ஒருங்கே இணைக்கின்ற வகையில் வளர்ச்சி பெற்றுச் சென்றதன் அடிப்படையில் கலையுலகில்

தனக்கெனத் தனித்துவமான ஓர் இடத்தினைத் இந்தியக் கலை மரபுகள் பெற்றுநிற்கின்றன.

இவற்றைப் பேணிக்காத்துக் கையளிப்பது மிகத் தேவையாகிறது. இவற்றில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் மிகவும் கவனம்கொண்டு செயல்பட முனைந்துள்ளது.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தமிழியல் ஆய்வு மாணவர்களுக்காகவும், பல்கலைக்கழக/கல்லூரி ஆசிரியர்களுக்காகவும் பல்வேறு பயிலரங்குகளை நடத்தியுள்ளது. தற்பொழுது இந்தியக் கலை மரபுகள் குறித்த பயிலரங்கை நடத்த முனைந்துள்ளது. தமிழியல் மற்றும் கலையியல் சார்ந்த ஆய்வு மாணவர்கள் இந்தப் பயிலரங்கில் பங்கேற்றுப் பயன்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இப்பயிலரங்கம் 24.09.2024 முதல் 30.09.2024 வரை 7 நாள்கள் நடைபெறவுள்ளது.

**பயிலரங்கின் விதிமுறைகளும், விவரங்களும் பின்வருமாறு:**

1. பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை: 40
2. பயிலரங்கம் நடைபெறும் நாள்கள்: **24.09.2024 - 30.09.2024**
3. பயிலரங்கம் நடைபெறும் நேரம்: காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை.
4. பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
5. பங்கேற்பாளர்களுக்குத் தங்குவதற்குரிய கட்டணமும், பயணப் படியும் மத்திய அரசு விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
6. பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவு, தேநீர் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
7. பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இணையவழி விண்ணப்பத்தை நிறைவுசெய்து சமர்ப்பிக்க வேண்டும்.

8. இணையவழி விண்ணப்பம் https://forms.gle/GZts4cAAEHqRLE8x5 என்ற இணைப்பின் வழியாக அல்லது கீழ்வரும் விரைவுத் தகவல் குறியீடு (QR Code) மூலமாகக் கிடைக்கப்பெறும்.

9. பயிலரங்கில் பங்கேற்கக் கட்டணம் ஏதும் இல்லை.

10. விண்ணப்பிக்க வேண்டிய இறுதி நாள்: 20.09.2024.

11. இந்தப் பயிலரங்கில் பங்கேற்பதற்காக முன்பு (31.05.2024) விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கலாம்.

12. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 20.09.2024 அன்று மின்னஞ்சல்/புலனம் மூலமாக அழைப்பாணை அனுப்பிவைக்கப்படும்.

13. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

(இயக்குநர்)

# Central Institute of Classical Tamil

**Conduct a workshop on**

# Art Traditions of India

**Workshop – 10**

**(24.09.2024 – 30.09.2024)**

## Announcement

Central Institute of Classical Tamil proposes to conduct a Workshop in the **Art Traditions of India** from **24.09.2024** to **30.09.2024.** India deservingly enjoys far-reaching fame for its achievements in almost all the arts including music, dance, painting, sculpture and architecture just as it has made substantial contributions to a number of languages and literatures. Indian arts are known for their unique features besides the ones absorbed from alien traditions. Taking advantage of the rapid developments in science and technology, they are flourishing and marching from strength to strength. We Should be proud of the pluralistic nature of Indian culture caused by the presence of various religions, languages, literatures and races. The progress made in utilitarian art, folk art, tribal art and ritual art has been tremendous and worthy of international acclaim.

There is now a dire need to preserve these traditions and pass them on to future generations. As has been warned by wise men, a nation that forgets its past glory will have no future.

Central Institute of Classical Tamil has been promoting the cause of Tamilology by a vast variety of activities which richly benefit students, researchers and teachers in colleges and universities.

Those desirous of doing research in areas relating to Indian arts are welcome to attend this workshop which will certainly provide them fresh insights and valuable clues.

Tamilology and Arts Department students are invited to participate from this workshop. This workshop will be held for 7 days from 24.09.2024 to 30.09.2024. The terms and conditions of this workshop are as follows:

**The terms and conditions of the workshop are as follows:**

1. The maximum number of participants permitted for the workshop: 40
2. Date of Workshop: 24.09.2024 to 30.09.2024 for 7 days.
3. Workshop Timings: 10.00 AM to 5.00 PM.
4. Participants must make their own accommodation arrangements.
5. Accommodation and travel allowance will be provided to the participants as per Government of India norms.
6. Lunch and tea will be provided by the CICT to the participants.
7. Candidates who wish to attend the workshop should filled and submit the online application.
8. Online application is available through the link https://forms.gle/GZts4cAAEHqRLE8x5 or through the following QR Code.

9. There is no fee to participate in the workshop.
10. Last date to apply: **20.09.2024.**
11. Candidates who have applied for Previous Advertisement (31.05.2024) apply again.
12. Call letter will be sent through email/WhatsApp on **20.09.2024** to the selected candidates as per the norms of the CICT.
13. Participants shall adhere to the CICT Rules & Regulations.

**(DIRECTOR)**